IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **63/2019** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. குப்பையாண்டி | CASTE | : | |
| S/O | ராமசாமி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | சின்ன இலந்தைக்குளம் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **53** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.08.2025**

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையை நான் படித்துப்பார்த்தேன். நீதிமன்ற ஆணையர் ஒருமுறை தான் வழக்குச்சொத்திற்கு வந்து பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் மதியம் ஒரு மணி அளவில் வழக்குச்சொத்திற்கு வந்தார். நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் வழக்குச்சொத்து அளக்கப்பட்டது, எனது வா.சா.ஆ.1, 2,3 பத்திரங்களின் அடிப்படையில் வழக்குச்சொத்தை அளக்கவில்லை. பிரதிவாதிகளின் ஆவணங்கள் அடிப்படையில் வழக்குச்சொத்து அளவீடு செய்யப்பட்டதா என்றால் எனக்குத்தெரியாது.

2. நீதிமன்ற ஆணையர் எத்தனை அயிட்ட சொத்துக்களை அளவீடு செய்தார் என்றால் ஒரு சொத்தைதான் அளந்தார். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த சொத்தின் நான்குமால் எல்லைகளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எனது தரப்பில் பத்திரங்களில் உள்ள நான்குமால் எல்கைகளுக்கும் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கும் வித்தியாசங்கள் உள்ளதா என்றால் எனது பத்திரங்களில் அந்த தேதியில் உள்ளபடியும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தற்போதுள்ள நான்குமால் எல்லைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. வழக்குச்சொத்திற்கு 300 மீட்டர்களுக்கு அப்பால் அமரடக்கி கிராம எல்லை அமைந்துள்ளது. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது அமரடக்கி கிராம எல்லையை அளவீடு செய்தாரா என்றால் அதை அளவீடு செய்யவில்லை, வழக்குச்சொத்து உள்ள கிராமமும் அமரடக்கி கிராமமும் வேறுவேறு கிராமங்கள். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யவந்தபோது எனது தரப்பு ஆவணங்கள், பத்திரங்கள் அனைத்தையும் அவரிடம் சமர்ப்பித்தேன். வழக்குச்சொத்து

கூட்டுச்சொத்து என்றாலும், அதற்கான ஆவணங்களை நீதிமன்ற ஆணையரிடம் கொடுத்தேனா என்றால் வழக்குச்சொத்திற்கான பட்டா கூட்டுப்பட்டாவாக உள்ளது, அதையும் நீதிமன்ற ஆணையரிடம் கொடுத்தேன்.

4. நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தை அளந்த விவரம் மற்ற கூட்டு பட்டாதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல, அளவீடு செய்தபோது அவர்களும் உடன் இருந்தார்கள். மற்ற கூட்டு பட்டாதாரர்கள் அளவீடு செய்யபோவதாக நான் தகவல் அளிக்கவில்லை. சரியாக அளவீடு செய்யாததால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி